அன்பார்ந்த அருள்தந்தையர்களே, அருள் சகோதரர்களே, அருள் சகோதரிகளே, பொதுநிலையினரே,

உங்கள் அனைவருக்கும் இயேசுவின் திருப்பெயரால் வாழ்த்துகள்!

நமது மறைமாவட்டம் உதயமாகி, வருகின்ற 2022, செப்டம்பர் 09 ஆம் நாளன்று, ஐம்பதாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. திருத்தந்தை ஆறாம் பவுல், தான் 17.05.1973 அன்று கையெழுத்திட்ட "Romani Pontifices" என்ற ஆணைப்படி பாளையங்கோட்டை மறைமாவட்டத்தை உருவாக்கினார். இதன் மூலம் மதுரை உயர் மறைமாவட்டத்தின், மறைவட்டங்களுள் ஒன்றாக இருந்த பாளையங்கோட்டை, தமிழகத்தின் பதின்மூன்றாவது மறைமாவட்டமாக உருவானது. அப்போது மதுரை உயர் மறைமாவட்டத்தின் பேராயராக இருந்த மேதகு பி. ஜஸ்டின் திரவியம் அவர்கள் தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தினால் திருத்தந்தையின் ஆணைக்கு 1973, செப்டம்பர் 09 ஆம் நாள் வடிவம் கொடுத்தார். அதே நாளில், பாளையங்கோட்டை மறைமாவட்டத்தின் முதல் ஆயராக நியமிக்கப்பட்ட பேரருள்திரு. ச. இருதயராஜ் மறைமாவட்டத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். 1973, செப்டம்பர் 12 ஆம் நாள் அவர் பேராயர் பி. ஜஸ்டின் திரவியம் அவர்களால் பாளையங்கோட்டை மறைமாவட்டத்தின் முதல் ஆயராகத் திருப்பொழிவு செய்யப்பட்டார்.

மறைமாவட்டத்தின் முதல் ஆயர் என்ற நிலையில், மேதகு ச. இருதயராஜ் ஆண்டகை அவர்கள் பாளை மறைமாவட்டத்தின் அடித்தளமாக விளங்குகிறார். "நற்செய்தியை அறிவிக்க" என்ற விருதுவாக்கோடு தனது மேய்ப்புப்பணியை ஆரம்பித்த ஆயர் அவர்கள் தனது அர்ப்பணமிக்க பணியினால் தலத்திருஅவையைக் கட்டி எழுப்பினார். 1999, ஜுலை 15 ஆம் நாள் மேதகு ச. இருதயராஜ் ஆண்டகை அவர்கள தனது பணியை நிறைவு செய்தபோது குருக்கள் ஆலோசனைக் குழுவினால் பேரருள்திரு. M. சூசைமரியான் அவர்கள் மறைமாவட்டப் பரிபாலகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் தனது பணியினை, பாளையங்கோட்டை மறைமாவட்டத்தின் இரண்டாம் ஆயராக மேதகு ஆ. ஜூடு பால்ராஜ் அவர்கள் திருப்பொழிவு செய்யப்பட்ட 2000, டிசம்பர் 08 ஆம் நாள் வரை செய்து வந்தார். "பணிபுரிய, பலியாக" என்ற விருதுவாக்கோடு தனது ஆயர் பணியைத் தொடங்கிய மேதகு ஆயர். ஆ. ஜூடு பால்ராஜ் அவர்கள் பதினெட்டு ஆண்டுகள் மறைமாவட்டத்தை வழிநடத்தினார். 2018, ஜுன் மாதத்தில், அவர்களது ஆயர் பணி நிறைவடைந்தபோது திருத்தந்தை பிரான்சிஸ், மதுரை உயர் மறைமாவட்டத்தின் பேராயரான மேதகு. அந்தோனி பாப்புசாமி அவர்களை மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்கப் பரிபாலகராக நியமித்தார். மேதகு. அந்தோனி பாப்புசாமி அவர்கள் நான் பாளையங்கோட்டை மறைமாவட்டத்தின் மூன்றாவது ஆயராக 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் நாள் திருநிலைப்படுத்தப்படும் மட்டும் மறைமாவட்டத்தை நல்ல முறையில் வழிநடத்தினார். இதே நாளில் "அஞ்சாதீர், நம்பிக்கையோடு மட்டும் இரும்" என்ற விருதுவாக்கோடு எனது மேய்ப்புப்பணியை ஆரம்பித்து பணியாற்றி வருகிறேன்.

Jubilé என்ற பிரெஞ்சு வார்த்தையிலிருந்து வரும் யூபிலி என்ற வார்த்தையும், இலத்தின் மொழியில் உள்ள jubilaus என்ற வார்த்தையும், எபிரேய மொழியில் உள்ள Yobel என்ற வார்த்தையும் பெருமகிழ்ச்சியின் காலத்தைக் குறிக்கின்றன. இம்மாதத்தில் பொன்விழா ஆண்டில் நாம் அடியெடுத்து வைக்கும்போது அந்தப் பெரு மகிழ்ச்சியை நம்மால் உணர முடிகிறது. பாளையங்கோட்டை மறைமாவட்டத்தின் மேல் ஒளிரும் விண்மீன்கள் அதன் வெற்றியையும், பலனையும் நன்றியுணர்வையும், மகிழ்ச்சியையும் எதிரொலிக்கின்றன. மாட்சிக்குரிய ஐம்பது ஆண்டுகள் என்பது பாளையங்கோட்டை மறைமாவட்டத்தின் வரலாற்றில் ஒரு மைல்கல். 1973, செப்டம்பர் 09 ஆம் நாள் ஒரு சிறு விதையாக உதயமான பாளையங்கோட்டை மறைமாவட்டம் ஒன்றரை இலட்சம் இறைமக்களுடன் இன்று ஒரு பெரிய விருட்சமாக வளர்ந்து நிற்கிறது. இறைப்பணியை அரை நூற்றாண்டு காலம் நேர்மையாய்ச் செய்ததனாலும், கிறிஸ்தவ அழைப்பிற்கு ஐம்பது ஆண்டு காலம் அர்ப்பணிப்புடன் இருந்தனாலுமே இம்முறை மாவட்டம் இன்று செம்மாந்து நிற்கிறது.

கடந்த காலத்தை நன்றியோடு நினைத்துப் பார்ப்பதும், நிகழ்காலத்தை மகிழ்வோடு கொண்டாடுவதும், எதிர்காலத்திற்கு உத்வேகம் பெறுவதும்தான் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்விழாக் கொண்டாட்டத்தின் அடிநாதமாகும். நமது மறைமாவட்டம் பல்வேறு விதங்களில் மிகச் சிறப்பான முறையில் இறைவார்த்தை அறிவித்ததையும், கடவுளின் திருவுளத்திற்கேற்ப இறைமக்களை அது கட்டியெழுப்பியதையும் திரும்பிப் பார்ப்பதற்குப் பொன்விழாக் கொண்டாட்டம் இன்றியமையாததாக இருக்கின்றது. இந்தப் பொன்விழா ஆண்டு, கடந்த காலத்தில் மறைமாவட்டம் செய்த சாதனைகளையும், எதிர்காலத்தில் இருக்கின்ற சவால்களையும் புதிய கண்ணோட்டத்தில் ஆய்வு செய்து பார்க்க ஒரு வாய்ப்புத் தருகிறது.

அதனால் இப்பொன்விழா ஆண்டு நமது வாழ்வின் எல்லா நிலைகளையும் புதுப்பித்துக் கொள்வதற்கான ஒரு தருணமாக இருக்கிறது.

1973 ஆம் ஆண்டு மிக எளிமையாக உதயமான பாளையங்கோட்டை மறைமாவட்டம் படிப்படியாக வளர்ந்து, இன்றைக்கு ஓர் ஆலமரம் போன்று ஓங்கி உயர்ந்து, பல நிலைகளிலும் வளர்ச்சியடைந்து மங்காப் புகழோடும், பெருமையோடும் இருக்கிறது. கடந்த காலத்திற்கு நாம் மதிப்புத் தருகிறபோது எதிர்காலம் ஆற்றல் நிறைந்ததாகவும், நிகழ்காலம் கொண்டாட்டமாகவும் மாறுகின்றது. இந்த யூபிலி ஆண்டு சிந்தித்துப் பார்ப்பதற்கும், மகிழ்ந்திருப்பதற்கும் நன்றிகூறுவதற்குமான ஒரு தருணமாக நான் நினைக்கிறேன். நன்றி கூறுவது என்பது அருள் பணியாளர்களுக்கும் இருபால் துறவிகளுக்கும் மட்டுமல்ல, பொதுநிலையினருக்கும்தான். மேலும் பொதுநிலையினராகிய உங்களுக்குத்தான் நாங்கள் பணிபுரிகின்றோம். நீங்கள் எங்களது இறைப்பணியில் உறுதுணையாக இருக்கிறீர்கள். அர்ப்பண உள்ளத்தோடும், தியாகத்தோடும் குருக்களும், இருபால் துறவிகளும், பொதுநிலையினரும் ஆற்றியிருக்கும் மிகப்பெரிய பணிகளுக்காக மனதார உங்களை நான் வாழ்த்துகிறேன்.

மறைமாவட்டம் கடந்து வந்த பாதையை நான் திரும்பிப் பார்க்கிற போது, அதன் தொடக்கக் காலகட்டத்திலிருந்து மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்திருக்கும், இன்றைய காலகட்டம் வரை ஒவ்வொருவரும் எப்படிப் பொறுப்புடன் தங்கள் கடமையை ஆற்றியிருக்கிறார்கள் என்பதை உணரமுடிகிறது. குறிப்பாக, இந்த மறைமாவட்டத்தினை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல பல்வேறு சவால்களுக்கு நடுவில் மிகத் துணிவோடு உழைத்த இதன் முன்னோடிகளை நினைத்துப் பார்த்து ஆண்டவருக்கு நன்றி கூறுகிறேன். நன்மையே உருவான இறைவன் நம் மறைமாவட்டத்திற்குச் செய்த அளப்பரிய நன்மைகளுக்காக அவரை ஏற்றிப் போற்றி, நன்றி கூறுவது இதுவே சரியான தருணம் என்று உணர்கின்றேன்.

நமது மறைமாவட்டம் கடந்த ஐம்பது ஆண்டுகளாய்ப் பேரொளி தரும் கலங்கரை விளக்காயிருந்து தீமை என்ற இருளை அகற்றி, ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் நம்பிக்கையையும், நற்செய்தியின் மதிப்பீடுகளையும், அன்பையும், நீதியையும், உண்மையையும், சேவை மனப்பான்மையையும் விதைத்திருக்கிறது. ஐம்பது ஆண்டுகள் என்ற மைல்கல்லை இந்த மறைமாவட்டம் கடந்து வந்ததை நான் திரும்பிப் பார்க்கும்போது, இதில் கடவுளின் பேரன்பையும் அவரின் பிரமாணிக்கத்தையும், பராமரிப்பையும் உணர முடிகிறது. ஒரு சிறிய மறைமாவட்டமாக இருந்து, இன்றைக்குக் காண்போர் வியக்கும் வகையில் வலிமையோடு உயர்ந்திருக்கும் நமது மறை மாவட்டத்தின்மீது கடவுள் பொழிந்திருக்கும் மிகுதியான ஆசிகளுக்கு அவருக்கு நன்றி கூறுவோம்.

நமது மறைமாவட்டத்தின் வரலாற்றில், பொன் எழுத்துகளில் பொறிக்கப்படும் வகையில், "நம்பிக்கையோடு நற்செய்திப் பணியாற்ற" என்ற தலைப்பில் பொன்விழாக் கொண்டாட்டங்களும் அதையொட்டிய நிகழ்வுகளும் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல், 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை நடைபெறும். பொன்விழாக் கொண்டாட்டத்தின் முதல் நிகழ்வாக பொன்விழா ஆண்டு தொடக்க விழாத் திருப்பலியானது ஆகஸ்ட் 21 ஆம் நாள் ஞாயிறு அன்று, புனித சவேரியார் பேராலயத்தில் ஒவ்வொரு பங்கிலிருந்தும் வரும் பங்குப் பிரதிநிதிகள் பங்கேற்போடு நடைபெறும்.-பங்களவில், ஒவ்வொரு பங்குப்பணியாளரும் நமது மறைமாவட்டம் உதயமான செப்டம்பர் 09 ஆம் நாள் தனது பங்கில் நற்கருணை ஆராதனை கொண்டாடி, செப்டம்பர் 11 ஆம் நாள் யூபிலியைத் தொடங்கி வைப்பர். இறைமக்களின் நம்பிக்கையைப் புதுப்பிக்கும் வகையில் இந்த ஆண்டு முழுவதும் பங்களவிலும், மறைவட்ட அளவிலும், மறை மாவட்ட அளவிலும் பல்வேறு நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்படும். இந்த யூபிலி ஆண்டானது ஆண்டவரின் அருளின் காலமாகவும், இது கிறிஸ்துவின் மறைவுடலாம் நம் திருஅவையைக் கட்டியெழுப்ப நம்மையே நாம் அர்ப்பணிக்கவும் உதவட்டும்.

நாம் மேற்கொள்ள இருக்கும் இந்தப் பணியில் நமது தாய் அன்னை மரியாவும் நமது பாதுகாவலர் புனித சவேரியாரும் நம்மை வழிநடத்துவார்கள். அனைவருக்கும் உளங்கனிந்த வாழ்த்துகளும், இறையாசியும்!

நம் ஆண்டவரில் அர்ப்பணத்துடன்,

+ S. Antonysamy

மேதகு ஆயர். ச. அந்தோனிசாமி

பாளையங்கோட்டை மறைமாவட்டம்

Rt. Rev. S. Antonysamy D.D., D.C.L. Bishop [seal]

தேதி: 12.08.2022